[1968 ஆகஸ்ட் 31

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பழத்தோட்டங்கள்

*182 வினு—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கின்ற பழத் தோட்டங்களின் விஸ்தீர்ணம் எவ்வளவு ?

(இ) பழத் தோட்டங்களுக்கு 1964-65, 1965-66, 1966-67-ம் ஆண்டுகளில் அரசினர் செலவழித்திருக்கிற ரூபாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 9,581 எக்கர்.

(இ)

ஆண்டு.	செலவு ரூபாய்.
(1) 1964-65	68,800
(2) 1965-66	45,500
(3) 1966-67	44,900

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, பழத் தோட்டங்களை வைப்பதற்காக சர்க்கார் மானியமாக எவ்வளவு தருகிருர்கள் ? கடனுக எவ்வளவு தருகிருர்கள் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக் கேள்வி போடவும்.

திருப்பூரில் செயற்கை கருமுறை நிலையம்

*183 வினு.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் திருப்பூரில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செயற்கைக் கருமுறை நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம், எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆண்டு (இ) கோவை தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செயற்கை முறைக் கருவூட்டு கிளை நிலையம் ஒன்று திருப்பூரில் 1965-ம் வருடம் ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் செயலாற்றி வருகிறது. இந்தக் கிளை நிலையம் கால்நடை மருத்துவமனையிலேயே நிறுவப்பட்டுள்ளது.

சிறைச்சாலை பார்வையாளர் குழு

*217 வினு—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகமெங்குமுள்ள சிறைச்சாலைகளைப் பார்வையிடுவதற்கென "சிறைச்சாலையைப் பார்வையிடும் குழு" அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், குழுவில் யார் யார் உள்ளனர் ?

(உ) இவர்களின் பதவிக்காலம் எதுவரையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.